# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 89/மா/2023**

**நாள்: 09.05.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 25.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.01.2023–ல் பெறப்பட்டு, 89/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 25.01.2023 நாளிட்ட தனது மனுவில் :

> மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு 1-ல் புது விளாங்குடி திண்டுக்கல் மெயின் ரோட்டில் இயங்கிவரும் அதியாபானா பள்ளி (Adhyapana School) CBSE பள்ளியானது Pre-Kg-to XII வகுப்பு வரை செயல்பட்டு வருகிறது. இப்பள்ளி கட்டிடத்திற்கு அனுமதி ந.க.எண்.198/2011 திட்ட அனுமதி எண். (நிபந்தனைகளுடன்) மவ/ம2 திகு எண்.8/2011 – திட்ட அனுமதி எண்.8/2011ல் மதுரை உள்ளூர் திட்ட குழுமத்தால் அனுமதி வழங்கப்பட்டது. இதில் பொது பயன்பாட்டு இடம் (OSR) விளாங்குடி பிட் 2 புல எண்.70/2C பரப்பளவு 0.12.81 ஹெக் (32 செண்ட்) தற்போது மதுரை மாநகராட்சி ஆணையர் பெயரில் உள்ளது. பட்டா எண்.2718 இதன் தற்கால சந்தை மதிப்பு சுமார் 6 (ஆறு) கோடி ரூபாய் ஆகும்.

மேற்கண்ட பொது பயன்பாட்டு (OSR) இடத்தை வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்வதற்கான மீண்டும் புதியதாக மதுரை உள்ளூர் திட்ட குழுமம் ந.க.எண்.4521/21/மதி நாள்:29.11.2021 திட்ட அனுமதி எண்.297/அ/2022ன் படி அனுமதியில் சம்மந்தம் இல்லாத இடத்தில் பொதுப்பயன்பாட்டு (OSR) இடம் புல எண்.72/4-ல் 1490 சதுர மீட்டர் இடத்திற்கு, சட்டத்திற்கு புறம்பாக, பணம் செல்வாக்கு அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி மேற்படி பள்ளி நிர்வாகத்தினர் புதிய அனுமதி வாங்கியுள்ளார். இந்த இடத்தின் சந்தை மதிப்பு 7 (ஏழு) லட்சம் மட்டும் ஆகும். இவ்விடமானது எந்தவிதத்திலும் பொது பயன்பாட்டுக்கு (OSR) உகந்தது இல்லை. இந்த புதிய பொதுப்பயன்பாட்டு (OSR) இடத்தை மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்கள் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. இதனால் மதுரை மாநகராட்சி சொத்து பல கோடி ரூபாய் இழக்க நேரிடும்.

மேலும் மேற்படி அதியாபனா பள்ளி (Adhyapana School) CBCE பள்ளி தரைதளம் மற்றும் இரண்டு மாடிகள் + பள்ளி முழுவதும் மாடிக்கு மேல் தகர செட் போடப்பட்டு அங்கேயும் வகுப்புகள் நடைபெற்று வருகிறது. இப்பள்ளி கட்டிடம் முற்றிலும் திட்ட அனுமதிக்கு மாறாக சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கட்டிடங்களுக்கு முழுமையான அளவீடு செய்து சொத்துவரி மற்றும் தொழில்வரி, தொழிலாளர் வரி முறையாக வசூலிக்கப்படாததால் மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பீடு ஏற்பட்டு வருகிறது. தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965-ன் பிரிவு 2 (8)-ன் படி (Section 2 (8) of the Tamilnadu Public Building (Licensing) Act 1965) உரிமம் பெறாமல் சட்டவிரோதமாக செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கட்டிடத்திற்கு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறைகளிடமும் உரிய அனுமதி பெறவில்லை.

மேற்படி அதியாபானா பள்ளி நிர்வாகத்தினர் புல எண்.70/2C இடத்தை விற்க திட்டமிட்டும் புதியதாக மதுரை உள்ளூர் திட்ட குழுமம் துறையிடம் அனுமதி பெறப்பட்ட புதிய (OSR) இடம் புல எண்.72/4-ல் கொடுக்கப்பட்டு முறைகேடுகளில் ஈடுபட்ட சம்மந்தப்பட்ட அரசு அதிகாரிகள் மற்றும் பள்ளி நிர்வாகத்தினர் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டும் பழைய பொதுப்பயன்பாட்டு (OSR) இடத்தை பாதுகாத்து சட்டத்திற்கு புறம்பாக திட்ட அனுமதிக்கு மாறாக உள்ள (Violation of Building) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை உத்தரவின்படி WP (MD) 23772 of 2022 Date:11/01/2023-ன் படியும் WP (MD) 27994 of / 2022 உத்தரவின்படி கட்டிடங்கள் அகற்றியும் (Remove) அடுத்த கல்வி ஆண்டில் 2023-2024 பள்ளி நடப்பதை தடை செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971-ன் படி பிரிவுகள் 56 (1) மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவுகள் 85-ன் கீழ் Stop Work Notice / Notice a Calling approval plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய Lock and Seal and Demolition notice வழங்கி மற்றும் அமலாக்க நடவடிக்கை விரைவாக எடுக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, மதுரை மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது மதுரை மாநகராட்சி, செயற் பொறியாளர் (திட்டம்) (பொ) தனது 6.04.2023 நாளிட்ட அறிக்கையில்**:

திரு. R. மயில்சாமி என்பவரது புகார் மனுவில் விளாங்குடி 2வது பிட் கிராமம்,சர்வே எண்.63/2, 64/3B2, 68/1B, 70/2, 72/4 & 72/5-க்கு திண்டுக்கல் சாலையில் உள்ள அதியாபானா பள்ளி OSR இடத்திற்கு புதிய அனுமதி ஏதும் வழங்க வேண்டாம் என கோரப்பட்டுள்ளது. மேலும் மனுமீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உறுப்பினர் செயலர் மதுரை உள்ளூர் திட்டக்குழும

அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு மதுரை உள்ளூர் திட்டக்குழுமத்தால் மனு பரிசீலிக்கப்பட்டு கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து அக்கடிதம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.04.2023அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 20.04.2023 அன்று நாகர்கோவில் சர்க்யூட் ஹவுஸில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தன்னுடைய வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மதுரை மாநகராட்சி, மண்டலம்–2(வடக்கு) வார்டு 1ல் புதுவிளாங்குடி திண்டுக்கல் மெயின் ரோட்டில் இயங்கிவரும் அதியாபானா CBSC பள்ளிக் கட்டிடத்திற்கு மதுரை உள்ளூர் திட்ட குழுமத்தால் 2011ல் திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டடத்தில் கட்டட அனுமதிக்கு மாறாக 2 மாடிக் கட்டடம் மற்றும் தகரக் கொட்டகை கட்டப்பட்டுள்ளது. மேலும் அனுமதியின்போது திறந்தவெளி இடத்தின் (OSR) பரப்பளவு 32 செண்ட் ஆகும். மேற்கண்ட திறந்தவெளியிடம் மதுரை மாநகராட்சி ஆணையரின் பெயரில் உள்ளது. மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி திறந்தவெளி இடத்தை விற்பனை செய்வதற்கு மேற்கண்ட பள்ளி நிர்வாகத்தினர் சட்டத்திற்கு புறம்பாக முயற்சிகள் மேற்கொண்டு மேற்கண்ட திறந்தவெளி இடத்திற்கு பதிலாக வேறுவொரு இடத்தை மாநகராட்சிக்கு அளித்திட முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. எனவே, பல கோடி மதிப்புள்ள தற்போதைய திறந்தவெளி இடத்தை பாதுகாத்திட தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அதியாபானா பள்ளிக்கு முழுமையாக சொத்து வரி மற்றும் அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான தொழில் வரி முறையாக வசூலிக்கப்படாமல் மிகக் குறைந்த அளவே வசூலிக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட கட்டடத்திற்கு விதிகளின்படி சொத்து வரி விதிக்கவும் , அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியைகள், பணியாளர்கள் ஆகியோரிடம் தொழில் வரி வசூலிக்கவும், மேற்கண்ட பள்ளிக் கட்டட அனுமதிக்கு மாறாக கூடுதலான கட்டடத்தை அகற்றிடவும், மேலும் அக்கட்டடத்தை மூடி முத்திரையிடவும் ஆவன செய்யுமாறும் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**மதுரை மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் (ம) உதவிப் பொறியாளர் ஆகியோர் 20.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள திண்டுக்கல் சாலையில் உள்ள அதியாபானா பள்ளியின் திறந்த வெளி இடம் தொடர்பாக பெறப்பட்ட புகாரையொட்டி, மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்திடமிருந்து மதுரை மாநகராட்சியால் பெறப்பட்ட மேற்கண்ட பள்ளிக்கான புதிய கட்டட வரைபட அனுமதி மதுரை மாநகராட்சியால் மறுக்கப்பட்டு மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்தின் கருத்துரு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி செயற் பொறியாளரின் (திட்டம்) அறிக்கை உதவி செயற்பொறியாளர் (ம) உதவி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

மனுதாரர் திரு. மயில்சாமி, மதுரை மாநகராட்சி மண்டலம் - 2, (வடக்கு), திண்டுக்கல் சாலையில், அதியாபானா பள்ளி நிருவாகத்தினர், திறந்தவெளி இடமாக ஒதுக்கப்பட்ட 32 சென்ட் இடத்தை வீட்டு மனையாக பிரித்து விற்பனை செய்வதற்காக, புதிதாக எண்.72/4ல் உள்ள OSR இடத்திற்கு திட்டக்குழு அனுமதி வாங்கியுள்ளனர் எனவும், மேலும் மேற்கண்ட பள்ளி கட்டிடத்திற்கு சொத்துவரி கட்டிடத்தை முழுமையாக அளவீடு செய்யாமல் வசூல் செய்வதாலும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கான தொழில் வரி வசூல் செய்யாமலும் இருப்பதால், மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுவதாகவும், அதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், OSR இடமாக புல எண்.72/4ற்கு திட்ட அனுமதி வழங்குவதை ரத்து செய்யவும் கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சியின் செயற்பொறியாளர் (திடம்/பொ) தன்னுடைய அறிக்கையிலும் (ம) உதவி செயற் பொறியாளர் (ம) உதவி பொறியாளர் தங்களுடைய வாக்குமூலத்திலும் மனுதாரரின் புகார் மனு மீது மதுரை உள்ளூர் திட்டக்குழுமத்திடமிருந்து மதுரை மாநகராட்சியால் பெறப்பட்ட மேற்கண்ட பள்ளிக்கான புதிய கட்டட வரைபட அனுமதி மதுரை மாநகராட்சியால் மறுக்கப்பட்டு, மதுரை உள்ளூர் திட்ட குழுமத்தின் கருத்துரு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளனர். இருப்பினும், மனுதாரர் குறிப்பிட்ட சொத்துவரி, பள்ளி ஊழியர்களுக்கான தொழில் வரி வசூல் செய்வது குறித்து எந்த அறிக்கையும் அளிக்கவில்லை என்பது மதுரை மாநகராட்சியிடம் இவ்விவரங்கள் ஏதும் இல்லையென்றே கருத வேண்டியுள்ளது. இது மதுரை மாநகராட்சி அலுவலர்கள் பணியில் எவ்வளவு மெத்தனமாக செயல்படுகிறார்கள் என்பதை இம்முறைமன்றம் தன்னுடைய அதிருப்தியை பதிவு செய்கிறது.

மேற்கண்டச் சூழ்நிலையில், மனுதாரரின் மனுவினை மதுரை மாநகராட்சி அலுவலர்கள் முழுமையாக பரிசீலிக்கவில்லை என தெரிகிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும். மதுரை மாநகராட்சியால் மேற்கண்ட பள்ளிக்கான புதிய வரைபட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே OSR இடமான புல எண்.70/2Cக்கு அனுமதி வழங்கிய, பின்பு, OSR இடமாக வேறுவொரு புல எண்.72/4ற்கு எவ்வாறு புதியதாக அனுமதி வழங்கப்பட்டது என்பதற்கு மதுரை மாநகராட்சியால் சரியான விளக்கம் அளிக்க இயலவில்லை. மனுதாரர் புகார் மனு அளித்தபின்பு தான் அப்புல எண்ணிற்கான திட்ட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மனுதாரர் புகார் மனு அளிக்கவில்லை என்றால், புதிய OSR இடமாக புல எண்.72/4க்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும் என இம்முறைமன்ற கருதுகிறது. எனவே, மதுரை மாநகராட்சியின் மண்டலம் - 2ன் அலுவலர்களின் செயல்கள் சந்தேகத்திற்கு இடமளிப்பதாக இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், குறிப்பாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(ii) (c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

மற்றும்

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner. namely:-

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

எனவே மேலே கண்டுள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்ட பிரிவு மற்றும் விதிகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

ஏற்கெனவே மேற்கண்ட பள்ளிக்கு அளித்த வரைபட அனுமதியில் OSR இடமாக குறிப்பிட்ட புல எண்.70/2C இடத்தை உறுதி செய்துக்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேற்கண்ட பள்ளி கட்டிடத்திற்கு உரிய சொத்து வரி வசூல் செய்யப்படுகிறதா என்பதையும், பள்ளியில் பணிபுரிபவர்களிடம் தொழில் வரி முறையாக வசூல் செய்யப்படுகின்றதா என்பதை உறுதி செய்யவும், அவ்வாறு வசூல் செய்யப்பட வில்லையெனில், மதுரை மாநகராட்சியின் மண்டலம் 2 (வடக்கு)ன் சம்பந்தப்பட்ட முன்னாள் (ம) இந்நாள் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும், மேற்கண்ட ஆணைகள் குறித்த அறிக்கையினை 45 தினங்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்கும்படி மதுரை மாநகராட்சியின் ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

The alleged OSR exchange issue is extremely sensitive, inflammable and dangerous in the attempt itself. It is not because whether rules of the Town and Country Planning Act would permit this sort of exchange of OSR lands that would open a typical pandora's Box throughout the State. Hence, extreme caution should be observed in the matter by the Corporation, lest it should be caught by the High Court in case if such a move is challenged by the aggrieved people. As of now, this has been put at rest as per the report of the Engineering wing of the Madurai Corporation. The Corporation Commissioner is advised to be vigilant and cautious in the matter.

It is viewed wild displeasure that the Corporation has defaulted in not reporting the details of Professional Taxes that are being collected from the school. The field officials concerned with this subject are cautioned and warned for their slackness and indifference. The Commissioner is directed to pull up those delinquents appropriately.

The Forum directs the Commissioner of Madurai Corporation to undertake detailed site inspection of the School premises with reference to the Building plan approval and initiate necessary action, if violations and deviations are detected during such inspection, as per Town and Country Planning Act, Rules and Regulations within the next 60 days without any dilatory let up. Detailed examination of the volume of Professional Taxes Collected from the School should be undertaken

and the Commissioner is directed to ensure that Collection of Proportionate Professional Tax is collected without any loss of Revenue to the Corporation. The DMA Office is directed to watch and ensure the compliance with the directions of the Forum by the Madurai Corporation.

2023-ஆம் ஆண்டு மே திங்கள் 9-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை – 2.
3. உதவி ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மண்டலம் - 2 (வடக்கு),
மதுரை – 2.
4. செயற்பொறியாளர்,
மதுரை மாநகராட்சி, (மண்டலம்-2)
மதுரை (வடக்கு),
தல்லாகுளம், மதுரை – 2.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
6. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.